# சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை பண்பாடு

*முனைவர் க. இரவி*
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவில்லிபுத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383074

## முன்னுரை

*பண்பாடு என்பது சமூக வளர்ச்சியைக் காட்டக்கூடியது. மக்களின் செம்மையான வாழ்க்கை முறையைப் பண்பாடு வெளிப்படுத்துகிறது. சமுதாயம் மக்களின் உணர்வுகளை மையமாகக் கொண்டது. மக்களின் தேவையை நிறைவேற்றுவதாகவும் சமுதாயம் அமைகிறது. சமுதாயம் சி றந்த வகையில் அமைய அதன் பண்பாடு அடிப்படையாக அமைகின்றது. மக்களின் வாழ்க்கையில் பண்பாட்டிற்கு முக்கியத்துவம் இருப்பதால்தான் மக்கள் இணக்கமாக வாழ முடிகிறது. பண்பாட்டால் மக்கள் வாழ்க்கைத் தனித்துவம் பெறுகிறது.*

*ஒரு மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் அவனது பண்பாட்டுப் பின்னணிக்கு இடம் உண்டு. ஒவ்வொரு பண்பாடும் நடத்தை விதிகளை வரையறை செய்து வைத்திருப்பதோடு, அப்பண்பாடு சார்ந்த மக்களின் அடிப்படை வாழ்க்கை முறையைத் தீர்மானிப்பதிலும் பெரும் பங்கு வகிக்கிறது. பண்பாட்டு அறிஞர் பலருள்ளும் ந. டைலரின் கருத்தினை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே சமுதாய உறுப்பினர் என்ற நிலையில் மனிதன் பின்பற்றிய பழக்க வழக்கங்கள், கலை, நம்பிக்கை ஆகியவனவற்றை அறிந்துகொள்ள உதவுவதே சிறந்த பண்பாடு எனப்படும்'' என்ற டைலரின் கருத்தினை அடியொட்டி இவ்வியலின் கருத்துக்கள் அமைந்துள்ளன.*

## பண்பாடு சொற்பொருள் விளக்கம்

*பண்பாடு என்ற சொல் சங்க இலக்கியத்தில் ''பண்பு'' என்ற சொல்லிலே வழங்கப்பட்டு வந்துள்ளது. கால மாற்றத்திற்குப் பிறகு ''பண்பாடு'' என வழங்கப்பட்டு வந்தது. பண்பாடு என்பது பண்பு + பாடு எனப் பிரிந்து பொருள் தரும். பண்பு எனப்படுவது உயிர். உயிரினால் ஆகிய பொருட்களின் குணம் ஆகும். பாடு என்பது பேசுதல், சொல்லுதல் ஆகும். பண்படுதல் என்பது சீர்திருத்துதல் எனப்பெறும். பண்பினைப் பேசுவது பண்பாடு எனப்படும்''. பண்பாடு என்னும் சொல் அண்மைக் காலத்தில் வழக்கில் வந்துள்ளது. டி.கே.சி. இச்செ ாலலை முதன்முதலில் பயன்படுத்தியுள்ளார். ஆயினும், தொல்காப்பியர் காலத்தில் ''பண்பு'' என்னும் சொல் வழக்கில் இருந்துள்ளதை,*

**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோற்றி'**

*என்ற நூற்பா வழி சான்றாகிறது.*

*பண்பு என்ற சொல்லிற்கு குணம், இயல்பு, தன்மை, முறை, செய்கை என்ற பொருளையும், பண்படுதல்'' என்ற சொல்லிற்கு செப்பமாதல், சீர்திருத்துதல் என்ற பொருளையும் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.[2]*

## பண்பாடு வேர்ச் சொல்

*பண்பாடு என்ற சொல் பண்படு என்ற வினைச் சொல்லிலிருந்து உருவாக்கம் பெற்றுள்ளது எனலாம். செயற்படு என்ற வினையிலிருந்து செயற்பாடு என்ற சொல் உருவானது போல, பண்படு என்ற வினையிலிருந்து பண்பாடு என்ற சொல் உருவாகியிருக்கிறது எனலாம். எனவே பண்பாடு என்ற சொல் ''பண்'' என்ற வேர்ச்சொல்லைக் கொண்டு அமைந்தது*

எனல் தகும். பண்' என்பதற்கு இசைப்பாட்டு, குதிரைக்கல்லணை, இசை என்ற பொருளும் உண்டு.

**பண்பாடு வேறு பெயர்**

"பண்" என்பற்கு இசைப்பாட்டு, நிறை, குதிரைக்கல்லணை, நரம்புள்ள வீணை, பண்ணென்னேவல் என்றும் பொருள் உண்டு. பண்பாடு தமிழ் அகராதி விளக்கம்

"பண்" என்பதற்கு சுவரம், காளாபிசேஷகம், கை, அழகு, சௌலப்யம், வார்த்தை கோடு, அணி என்ற பொருளை தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.

"பண்படுதல்" என்பதற்கு சீர்திருத்துதல், நிலம் முதலியன செப்பமாதல் என்றும், பண்பட்டவன்" என்பதற்கு கல்வியறிவும், அனுபவமும் உள்ளவன்" என்றும் தமிழ் அகராதி கூறுகிறது. "பண்படு என்பதற்கு உழுது பயிரிடுவதற்கு ஏற்றவாறு சீரடைதல், பண்பட்டநிலைஅடைதல்என்றபொருளையும் "பண்பாடு" என்பதற்கு குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும் சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் சிந்தனை வெளிப்பாடு என்ற பொருளை மற்றொரு தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.

**தமிழில் பண்பு, பண்டு, பண்பாடு**

நாம் பண்பாடு எனும் சொல்லால் இன்று குறிப்பிடுவனவற்றை நம் முன்னோர்கள் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற சொற்களில் குறிப்பிட்டனர். பண்பு, பண்படு, பண்பாடு ஆகியவை உறவுடைய சொற்களாகத் தமிழில் வழங்கி வருகின்றன. "வாழ்க்கையில் மனிதன் முழு நிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவது பண்பாடு" எனப்படும்.

பண்பாடு மனித மனத்தோடு அகவயமான தொடர்புடையதாகவும், மனத்தைப் பக்குவப்படுத்துதல், சீர்ப்படுத்துதல், நிறைவான குணங்களால் நிரம்பியிருத்தல், குற்றங்களில் இருந்து விலகியிருத்தல் போன்றவற்றைக் குறிப்பதாகவும் வழங்கப்படுகின்றது.

வாழ்வியல் பண்பாடு, கலாச்சாரம் என்பவை "சமுதாயத்தில் உள்ள ஒரு மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, நீதி, சட்டம், பழக்க வழக்கங்கள் என்பவற்றைக் குறிப்பதுவேயாகும்."

பண்பாடு மதம், மொழி, கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்ற அனைத்துத் துறைகளுடனும் தொடர்புடையதாக அமைகிறது. எனவே எந்தத் துறைச் சார்ந்த ஆய்வுகளையும், பண்பாட்டின் துணையுடன் அணுகும்போதுதான் அதன் வளர்ச்சிப் பாதைகளையும், முரண்பாடுகளையும் உள்ளார்ந்த கட்டமைப்பையும் சரியாக இனம் காணமுடியும்.

"பண்பாடு நாம் கற்றனவும் கேட்டனவும் நிலைகெடாத வகையில், உள்ளத்து நிலைத்து நிற்பதாகிய குணமே நம் செயலெல்லாம் கடமை வழி நம்மை வாழ வழிகாட்டுவது" என்பர்.

ஒருவன் தன் சூழலுக்கேற்ப நடந்து கொள்ளும் விதமே பண்பாடு எனவும் குறிப்பிடப்படுகிறது. மனிதன் என்பவன் ஒரு ஒழுங்குபட்ட நிலைக்குள்ளேயே மனதைப் பக்குவப்படுத்தித் தன்னை நெறிப்படுத்தி வாழும் முறையே பண்பாட்டின் அடிப்படையாகும். மக்கள் அனைவரும் சேர்ந்து வாழ வழிவகை செய்வது பண்பாடாகும். மனித சமூகத்தில் பண்பாடு என்ற அமைப்பே மனிதனை மற்ற இனத்திடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. எனவே பண்பு என்பது தனிமனிதரிடம் தோன்றிய பிறகு சமுதாயம் அதனை ஏற்றுக்கொள்கிறது.

**பண்பாடு - அறிஞர் விளக்கம்**

பண்பாடு, மனித சமூகம் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதலே மனிதனிடத்துத் தோன்றியதாகக் கூறுவர். பண்பாடு முன்னோர்கள் வாழ்வில் வகுத்த ஒழுங்குமுறையான வாழ்க்கை முறை. இவை மக்களின் மன உணர்வுகளையும், எண்ணங்களையும், அறிவுத்திறனையும் பிரதிபலிக்கிறது. பண்பாடு குறித்து அறிஞர்கள் பலரும் பல்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர்.

*"ஓர் இனம் மற்றோர் இனத்தோடு பகைமை அற்று உதட்டால் அல்லாமல் உள்ளத்தால் ஒன்றியும், அவ்வொன்றுதலால் உள்ளத்தில் நிகழும் பிற நிகழ்ச்சிகளும், செயல்களும், பிறவும் யாவும் தனி மனிதனுக்கும், தனி சமூகத்திற்கும், தனி நாட்டிற்கும், தனி இனத்துக்கும் என்றில்லாமல் எல்லாருக்கும் ஒப்ப இருக்கும் வகையில் வழிகாட்டுவதே பண்பாடாகும் என்பர்.*

*"சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப் பிணைந்து இயங்கும்பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள், கலையுணர்வு, சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒரு வகைச் சமுதாயச் சிந்தனையாக வெளிப்படுவதும், மனிதனுடைய உள்ளத்து உணர்வுகள் பண்பட்டு, பதப்பட்டு, செம்மை நலமுறுவதும் பண்பாடாகும்."*

*"பண்பாடு என்பது இன்ன வகைத்து என்று காண இயலாவிடினும் பண்பாடு உள்ளமையால் தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது என்பதை உணர இயலுகிறது" என்பர். எனவே, "கட்டுக்கடங்கிய, திருந்திய மனித உணர்வுகளே பண்பாடு" எனலாம். இவ்வாறு பல அறிஞர்கள் பண்பாட்டிற்கு விளக்கம் தருகின்றனர்.*

**பண்பாட்டின் தன்மைகள்**

*எளிதில் வரையறுத்துக் கூற முடியாத எந்த ஒன்றிற்கும், அதன் இயல்புகளை எடுத்துரைத்தால் உண்மைகள் புலனாகும். பண்பாடு காலந்தோறும் மாறிவரும் இயல்புடையதும் இடத்துக்கு இடம் வேறுபடும் தன்மை உடையதும் ஆகும்.*

*பண்பாடு ஒரு ஒழுங்கு முறையாகும். இந்த ஒழுங்கு முறை தான் ஒழுக்கமாக அமைகிறது. ஒழுக்கம் என்பது மக்கள் கூட்டத்தில் ஒருவன், பிறர் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறானோ அதேபோன்று அவன் எல்லோரிடமும் நடந்து கொள்ளும் முறைமையாகும்.*

*பழக்கமும், வழக்கமும் பண்பாட்டின் அடிப்படையில் அமைகிறது. பழக்க வழக்கம் என்பன மனிதன் உண்பது, உடுத்துவது, தொழில் செய்வது, உறங்குவது போன்றவற்றை மையமாகக் கொண்ட நடைமுறைகளாகும். காலையில் நீராடல், கடவுளைத் தொழுதல், பணிகளைச் செய்தல், மாலையில் கடவுளை வணங்குதல், உண்டி கொள்ளுதல், உறங்குதல் இவையெல்லாம் அன்றாட பழக்க வழக்கங்களாகும்.*

*மக்களின் பழக்கங்கள் என்பது ஒரு தனிமனிதனால், ஒரு குடும்பத்தினரால், ஒரு ஊரால், ஒரு சமுதாயத்தினரால், ஒரு நாட்டினரால் ஒரேதன்மையில் மேற்கொள்ளப்படும் நடைமுறைச் செயல்பாடுகளாகும்.*

*பண்பாடும், நாகரிகமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டனவாகும். நாகரிகம் என்பது மக்கள் ஒன்று கூடி வாழ்வதற்கான பழக்க வழக்கங்களையும், செயல்முறைகளையும் அறிவின் துணைகொண்டு உருவாக்கிக் கொள்ளப்படும் ஒன்றாகும்.*

**பண்பாட்டு படிநிலை வளர்ச்சி**

*முற்காலத்தில் மனிதர்கள் இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று உணவு தேடினர். இயற்கையிலிருந்து பெற்ற காய்கள், கனிகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் இறைச்சி போன்றவற்றை உண்டனர். பின்னர் உணவைப் பெறவும், கொடிய விலங்குகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் கூரிய கற்கள், மரக்கொப்புகள், மரத்தடிகளையும் பயன்படுத்தினர். இலை தழைகளையும், விலங்குகளின் தோலையும் ஆடையாக உடுத்தி குளிர், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து தன்னை காத்துக் கொள்ளும் நிலையைக் கற்றுக்கொண்டனர்.*

*மனிதன் அறிவு வளர்ச்சியாலும், முயற்சியின் அதிகரிப்பினாலும் உலோகங்கள் கண்டுபிடிக்கப் பெற்றதுடன் அவற்றைப் பயன்படுத்தி கருவிகள் பல செய்யவும் கற்றுக் கொண்டான்.*

ஒலியளவிலும், குறியீட்டு அளவிலும் தம் கருத்தை வெளியிட்டு வந்த மக்கள் பேச்சு மொழியை உருவாக்கிக் கொண்டனர்.

அலைந்து திரிந்த மக்கள் நீர்வளமிக்க நிலப்பரப்பில் நிலையாகத் தங்கி விவசாயத் தொழில்களை மேற்கொண்டு வாழத் தொடங்கினர். ஆடவர் பெண்டிரிடையே வேலைப் பிரிவினை ஏற்படுத்திக் கொண்டனர். விவசாயப் பொருட்களும், விலங்குகளின் பால், இறைச்சி போன்றனவும் உணவுப் பொருள்களாயின. இவ்வாறு மனித இன வளர்ச்சியுடன் பண்பாடும் இணைந்தே வளர்ந்த நிலையினை அடைந்தது என அறிய முடிகின்றது.

சமூகவியலாளர், ''பண்பாடு மிகத் தொன்மையான காலத்திலேயே தோன்றிவிட்டது எனவும், முற்கால மனிதர்களின் உடல் அமைப்பிலிருந்து இக்கால மனிதர்களின் உடல் அமைப்பு வரையிலும் உள்ள பரிணாம வளர்ச்சி நிலையைப் பண்பாடு கொண்டுள்ளது'' எனவும் கருதுகின்றனர்.

## நிமித்தம் பார்த்தல்

தொல்காப்பியர் நாளும், புள்ளும் பிற நிமித்தங்களும் பற்றிக் கூறுகிறார். நாள் நிமித்தம், புள் (அ) பறவை நிமித்தம் பிறவற்றின் நிமித்தங்களால் சொல்லும் பொருளும், நன்மையும் தீமையும் அறிந்து, மறவர்கள் உவத்தலும், அச்சம் கொள்ளுதலும் எய்தித் தலைவன் நலம்பெற எதிர்கால நோக்கில் வாழ்த்துதலை ஓம்படை என்பர்.

## அச்சமும் உவகையும் எச்சமின்றி

**நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்**
**காலம் கண்ணிய ஓம்படை**[3]

என்று தொல்காப்பியம் கூறுகிறது. நிமித்தம் என்பதால் உன்னநிலை, விரிச்சி கேட்டல், பல்லியின் சொல்லறிதல் முதலியவற்றைக் கூறலாம். நிமித்தம் என்பதற்கு ''அறிவிப்பது'' என்பது பொருளாகும். ''புள் நிமித்தம் பார்த்தல்?'' என்பது பறவைகள் பறக்கும் பக்கங்களை வைத்து நிமித்தங்களைத் தீர்மானிப்பதாகும்.

**குருகும் இருவிசும்பு இவரும்: புதலும்**
**வரிவண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே,**
**சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்:**
**வருவார் கொல் வாழி தோழி! பொருவார்**
**..................... வழைஅமல் அடுக்கத்து**
**கன்றுஇல் ஓர்ஆ விலங்கிய**
**புன்தாள் ஓமைய சுரன் இறந்தோரோ!4**

என்ற குறுந்தொகைப்பாடல், காலமல்லாத காலத்தில் நாரை வானத்தில் பறப்பதையும், பூவாத காலத்தில் பூக்கள் பூப்பதையும் நல்நிமித்தங்களாகக் கூறுகிறது.

புள் நிமித்தம் பார்த்து மணவிழா எடுக்கின்ற வழக்கம் இருந்தது என்பதை,

**புள்ளுப்புணர்ந்து இனிய ஆகத் தெள் ஒளி**[5]

என்ற வரிகளால் அறியலாம்.

## இலக்கியமும் பண்பாடும்

பண்டைத் தமிழரது வாழ்வின் அடையாளங்களாக இலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழர்கள் மக்களைக் காக்கவும், மக்களின் அறியாமையைப் போக்கவும், விரும்பிச் சமூகத்தினை எதிர் கொள்வதையும் வாழ்க்கையின் இன்றியமையாமை பற்றிய செய்திகளையும், பண்பாட்டின் அடித்தள செய்திகளையும் இலக்கியச் செய்திகள் வழியாக உணர்த்தினர்.

ஒருவன்எத்தகையஉயர்ந்தபட்டங்களையோ, பதவிகளையோ பெற்றிருந்தாலும் அவனிடம் பண்பாடு இல்லை எனில் அந்த பட்டங்களினாலும் பதவிகளினாலும் எந்த பயனும் இல்லை. சிறந்த பண்பாட்டிற்கு அடிப்படையாகத் திகழ்வது நட்பு, அறம், இரக்கம், செய்ந்நன்றி அறிதல் போன்ற நற்பண்புகளாகும்.

## சங்க காலப் பண்பாடு

பண்பாடு என்றால் பயன்பாடு, மேம்பாடு என்பார் அறிஞர்.

**பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்**[6]

என்ற கலித்தொகைப் பாடல் சங்க காலத்திலேயே பண்பின் தகைமையை குறிப்பிடுகிறது.

பிறர்க்குக் கொடுத்து வாழும் வாழ்வே சங்க காலத்தின் உயிர்ப்பண்பாய் விளங்கியது. தன்னிடம் பொருள் வேண்டி இரவலர் வாராத நாட்கள் இருக்கக்கூடாது என்பதே சங்கத் தலைவனின் விருப்பமாகும்.

**ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்**
**"ஈயேன்" என்றல் அதனினும் இழிந்தன்று**
**"கொள்" எனக் கொடுத்தல் உயர்ந்தன்று - அதன் எதிர்,**
**"கொள்ளேன்" என்றல் அதனினும் உயர்ந்தன்று[7]**

என வாழும் வாழ்வே உயர்ந்ததாகப் போற்றப்பட்டது.

மன்னனுக்குப் பெருமதிப்பு இருந்தது மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" எனக் குடிமக்களுக்கு மன்னன் உயிராக அமைந்ததையும் நன்னடை நல்குதல் வேந்தர்க்குக் கடனே' எனக் குடிமக்களின் நல்லொழுக்கத்திற்கு அவன் காரணமாவதையும் சங்கப் பாடல்கள் இயம்புகின்றன.

ஓரிடத்தில் வாழும் மக்களின் இயல்பைப் பொறுத்தே அவ்விடத்தின் சிறப்பு, நல்ல தன்மை அடைகின்றது என்பதை,

**நாடாகொன்றோ காடா கொன்றோ**
**அவலாகொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே![8]**

என்ற பாடல் உணர்த்துகின்றது.

தமிழ் மக்கள் வகுத்த வாழ்விலக்கணம் அவர் தம் வாழ்க்கைச் சிறப்பையும் நன்கு உணர்த்துகிறது. பிற இலக்கண இலக்கியத்திற்கு இல்லாத பெருமை நம் தமிழ் இலக்கண இலக்கியத்திற்கே உரியதாகும். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த முதல்மொழி தமிழ்மொழியாகும். அதுவே பண்பாட்டின் சிறப்பு அம்சமாகவும் விளங்குகிறது.

**மனிதநேயப் பண்பு**

மனிதன் மனிதனிடத்து மட்டுமல்லாது பிற உயிர்களிடத்தும் அன்பு பாராட்டும் அரிய பண்பு மனிதநேயம் எனப்படும். மனிதர்களிடம் மட்டுமல்லாது அனைத்து உயிர்களிடத்தும் அன்பு கொள்வது உயர்ந்த பண்பாகும். அன்பு உறவுக்கப் பாலமாகும். அதனால் தான் வள்ளுவரும் அன்பின் வழியாது உயிர்நிலை என்றார்.அன்பு ன்பது எலலாக் காலத்திற்கும், எல்லா நாட்டிற்கும் பொதுவானது. மனித சமுதாயம் செந்நெறியில் செல்வதற்கு வழிவகுக்கவல்ல ஒரு பண்பாட்டுக் கூறு அன்பாகும். பிறவுயிர்களையும் தன்னுயிர் போல் மதித்து இரக்கம் காட்டுவது தமிழர் பண்பு. அஃறிணை உயிர்களைக் கூட அழிக்க விரும்பாத இரக்க குணம் படைத்தவர்கள் தமிழர். பழந்தமிழர் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து உயிர்களிடத்தும் மனித நேயப் பண்போடு இருந்தனர்.

தலைவன் தன் தேர்ப்பாகனிம், "நுண்ணிய மணல் பரந்த குளிர்ந்த நீர்நிலையிடத்து அன்னங்கள் வரிசையாகத் தாழ்வாகப் பறக்கும். எனவே குதிரைகளை மென்மையாக, அப்பறவைகள் துன்புறாவண்ணம் ஓட்டிச் செல்" என வலியுறுத்துகின்றான். மேலும் தலைவனின் தேரில் அருவிபோன்ற ஒலிக்கும் இயல்புடைய மணிகள் மாலையாகக் கட்டப் பட்டிருப்பதால், அவற்றின் ஒலியினால், மனித உயிர்களுக்கு மட்டுமின்றி பிற உயிர்களுக்கும் துன்பம் நேரும், எனவே தேரை மெதுவாகச் செலுத்துக என்றான். இதனை,

**பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாது உண் பறவை பேறுதல் அஞ்சி,**
**மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்[9]**

என்ற பாடல் சுட்டுகிறத.

தேன் எடுக்கும் தேனீக்குக் கூடத் துன்பம் தரும் வண்ணம் தன் தேர் செல்லக்கூடாது என விரும்பியது தலைவனின் அன்புள்ளம். இந்த மனித நேயப் பண்பாட்டின் அடிப்படையிலேயே கடையேழு வள்ளல்களில் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியும் மற்றையோரும் மனித நேயப் பண்புக்கு வழிவகுத்து நின்றதை இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

**இன்றைய நகரப் பண்பாடு**

நகரங்கள் உழவுத் தொழிலைத் தவிர பிற தொழில்களையே முன்னிலைப் படுத்துகின்றன. நகர்ப்புற மக்கள் இயந்திர வாழ்க்கையே மேற்கொள்கின்றனர். ஆகவே எச்செயலிலும் வேகத்தன்மையே நிலவுகிறது. அங்குள்ள மக்கள் தம்மைச் சுற்றியுள்ள வீடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளாமல் தனித்து வாழ்கின்றனர்.

நகர்ப்புற மக்களிடம் நாகரிகக் கவர்ச்சி மிகுதியாக உள்ளது. "புறநாகரிகங்களைக் காட்டிலும் மனிதனுடைய அகநாகரிகமே பண்பாட்டிற்குஅடிப்படையாகின்றது" என்பர். மக்கள் அனைவரும் அகநாகரிகங்களைத் தம்முள் வளர்த்துக் கொண்டால் பண்பாட்டு வளர்ச்சிக்கு, சூழல் ஒரு தடையாக இருக்காது என்பதை அறியமுடிகிறது.

**தொகுப்புரை**

சங்க காலத் தமிழரின் வாழ்க்கை, மனித சமூகத்திற்கு ஒரு சான்றாக அமைகிறது. பழந்தமிழரின் உணர்வுகளையும், எண்ணங்களையும் காட்டும் விதமாக இலக்கியங்களில் பண்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அக்கால மக்கள் சிறந்த பண்பாட்டுக் கூறுகளைத் தமக்குள் வகுத்துக் கொண்டு வாழ்ந்தனர். பழந்தமிழர்கள் விட்டுச்சென்ற பண்பாட்டுஎச்சங்கள்இன்றும்சமுதாயத்திற்கு ஒழுங்குமுறையான வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டும் விதமாக அமைகிறது.

சங்கப் பாடல்களில் தலைவனைக் கற்புடைய மனைவியின் கணவன் என்று பாராட்டும் முறை இருந்திருப்பதை அறியலாம்.

அக இலக்கியம் சங்க காலத்துச் சமுதாயத்தில் நிலவிய தனிமனித ஒழுக்கத்தை அறிய உதவுகிறது. அதுவே பண்பாட்டின் உயர்நிலையாக உயிர்நிலையாகவும் விளங்கியது என்பதையும் மக்களின் வாழ்வியல் செய்திகளையும் அளித்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல், உரியியல், நூ. 1.
2. ந.சி. கந்தையா, (தொ.ஆ.), தமிழ் அகராதி, ப. 469.
3. தொல். பொருள். நூ. 88.
4. குறுந். பா. 260:1-8.
5. அகம். பா. 136:3.
6. கலி. பா. 133:8.
7. புறம். பா. 204:1-4.
8. மேலது., பா. 187:1-4.
9. அகம். பா. 4:10-12.